இன்றைய செய்தி நாளைய வரலாறு

முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

புதன்கிழமை 18-12-2024

# பழனிசாமியின் தப்புத் தாளங்கள்

பேசத் தெரியாதவர் கூட்டத்தில் உளறுபவர் கெட்டிக்காரர் என்ற நினைப்பில் அ.தி.மு.க. பொதுக்குழுவில் உளறிக் கொட்டி இருக்கிறார் எடப்பாடி பழனிசாமி. அவர் சொல்லும் புள்ளிவிபரங்களைப் பார்த்தால் புல்லரிக்கிறது. அவர் பேசும் லாஜிக்குகளைப் படித்தால் குமட்டிக் கொண்டு வருகிறது.

இப்போது நாம் பார்க்கும் பழனிசாமி, அனைத்திலும் தோற்ற தோல்வி சாமி ஆவார்.

**2019 - நாடாளுமன்றத் தேர்தல், சட்டமன்ற இடைத் தேர்தல், 9 மாவட்ட ஊரக உள்ளாட்சித் தேர்தல்கள்**

**2021 - ஊரக உள்ளாட்சித் தேர்தல், தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தல்**

**2022 - நகர்ப்புற உள்ளாட்சித் தேர்தல்**

**2023 - ஈரோடு இடைத்தேர்தல்**

**2024 - நாடாளுமன்றத் தேர்தல்** - ஆகிய அனைத்துத் தேர்தலிலும் தோற்றவர். இதன் மூலமாக மக்களால் நிராகரிக்கப்பட்டவர்தான் இந்த பழனிசாமி. விக்கிரவாண்டி இடைத்தேர்தலில் நிற்காமல் புறமுதுகு காட்டி ஓடியவர் பழனிசாமி.

பெரிய கூட்டணி அமையாததால் நாடாளுமன்றத் தேர்தலில் தோற்றாராம் பழனிசாமி. நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் தி.மு.க. கூட்டணி 47 விழுக்காடு வாக்குகளைப் பெற்றுள்ளது. அ.தி.மு.க. கூட்டணி 23 விழுக்காட்டையும், பா.ஜ.க. கூட்டணி 18 விழுக்காட்டையும் பெற்றுள்ளது. அ.தி.மு.க.வின் விழுக்காட்டையும் பா.ஜ.க. விழுக்காட்டையும் கூட்டினால் 41 விழுக்காடுதான் வருகிறது. 47 ஐ தாண்டவில்லை. எனவே, பழனிசாமி எந்தக் கூட்டணி அமைத்திருந்தாலும் தோற்றுத்தான் போயிருப்பார்.

நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் 40 தொகுதியிலும் தோற்றவர் மட்டுமல்ல; 7 தொகுதியில் டெபாசிட் போய்விட்டது பழனிசாமி கட்சிக்கு. 12 தொகுதியில் மூன்றாவது இடத்துக்கு பழனிசாமியின் கட்சி போனது. கன்னியாகுமரி தொகுதியில் நான்காவது இடம் போனது பழனிசாமியின் கட்சி. நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலை 234 சட்டமன்றத் தொகுதி வாரியாக பகுத்துப் பார்த்தால் 222 தொகுதிகளில் தி.மு.க. கூட்டணி அதிக வாக்குகளைப் பெற்றுள்ளது.

“222 சட்டமன்றத் தொகுதி வாரியாக தி.மு.க. கூட்டணி அதிக வாக்குகள் பெற்றுள்ளது” என்று ‘தி இந்து’ ஆங்கில நாளிதழ் செய்திக் கட்டுரை வெளியிட்டது பழனிசாமிக்குத் தெரியுமா? 32 மக்களவைத் தொகுதிகளை உள்ளடக்கிய 192 சட்டமன்றத் தொகுதிகளில் முழுமையாக தி.மு.க. கூட்டணியே அதிக வாக்குகளைப் பெற்று சாதனை படைத்துள்ளது என்றும், திருவள்ளூர், தென்சென்னை, அரக்கோணம், பெரம்பலூர், கரூர், திருச்சி, கோவை, நாமக்கல், நீலகிரி, மதுரை, தென்காசி, தூத்துக்குடி மக்களவை தொகுதிகளில் அனைத்து சட்டமன்றத் தொகுதி களிலும் அதிக வாக்குகளைத் தி.மு.க. கூட்டணி பெற்றுள்ளது என்றும் ‘தி இந்து’ சொல்லியது.

மக்களவைத் தேர்தல் வாக்கு விவரங்களின் படி 8 சட்டசபைத் தொகுதிகளில் மட்டுமே அ.தி.மு.க. முன்னணியில் இருக்கிறது. 3 தொகுதிகளில் மட்டுமே பா.ம.க. அதிக வாக்குகளைப் பெற்றுள்ளது. 2 தொகுதிகளில் மட்டுமே தே.மு.தி.க. வேட்பாளர்கள் கூடுதல் வாக்குகளைப் பெற்றுள்ளனர். பா.ஜ.க. எந்த சட்டமன்றத் தொகுதியிலும் கூடுதல் வாக்குகளை வாங்கவில்லை என்றும் ‘தி இந்து’ ஆங்கில நாளிதழ் சொல்லி இருந்தது.

பழனிசாமிக்குப் புரியும் மொழியில் சொன்னால், நாடாளுமன்றத் தேர்தல் நடக்கும் போது சட்டமன்றத் தேர்தல் நடந்திருந்தால் பழனிசாமி கட்சிக்கு 8 சீட்தான் கிடைத்திருக்கும். இது எதுவும் புரியாமல், கத்திக் கொண்டிருக்கிறார் பழனிசாமி.

இவ்வளவு தைரியசாலி என்றால் விக்கிரவாண்டியில் பழனிசாமி போட்டியிட்டிருக்கலாமே? ஏன் ஓடிப் பதுங்கினார்? திராவிட முன்னேற்றக் கழகத்தின் வேட்பாளராகப் போட்டியிட்ட அன்னியூர் சிவா என்கிற சிவ சண்முகம், தனக்கு அடுத்ததாக வந்த பா.ம.க. வேட்பாளரை விட 67 ஆயிரத்து 575 வாக்குகளைக் கூடுதலாகப் பெற்று வெற்றி பெற்றார். 1 லட்சத்து 95 ஆயிரம் வாக்குகள் பதிவானது என்றால் அதில் 1 லட்சத்து 24 ஆயிரம் வாக்குகள் உதயசூரியனுக்குக் கிடைத்துள்ளது. மூன்றில் இரண்டு பங்கு வாக்குகளை தி.மு.க. பெற்றுள்ளது. இது தெரிந்துதான் பழனிசாமி தலைமறைவு ஆனார்.

2021 சட்டமன்றத் தேர்தலுக்கு பிறகு, 2022 ஆம் ஆண்டு உள்ளாட்சித் தேர்தல் நடந்தது. 21 மாநகராட்சிகள் 132 நகராட்சிகள் 435 பேரூராட்சிகள் என அனைத்தையும் மொத்தமாக கழகக் கூட்டணி கைப்பற்றியது.

**கோவை, திருப்பூர், சேலம், ஈரோடு ஆகிய மாநகராட்சிகளைக் குறி வைத்து களம் இறங்கியது அ.தி.மு.க. பழனிசாமி கட்சிக்கு மரண அடிதான் கிடைத்தது.**

**கோவையில் மொத்த வார்டுகள் 100. இதில் 3 இடங்கள்தான் அ.தி.மு.க. பிடித்தது.**

**சேலத்தில் மொத்த வார்டுகள் 60. இதில் 7 இடங்களைத்தான் அ.தி.மு.க. பிடித்தது.**

**ஈரோட்டில் மொத்த வார்டுகள் 60. இதில் 6 இடங்களைத்தான் அ.தி.மு.க. பிடித்தது.**

**திருப்பூரில் மொத்த வார்டுகள் 60. இதில் 19 வார்டுகளை அ.தி.மு.க. கைப்பற்றியது. இதுதான் அ.தி.மு.க.வின் கோட்டையாக இவர்கள் சொல்லிக் கொண்ட மேற்கு மண்டலத்தின் நிலைமை ஆகும்.**

சென்னையில் மொத்தமுள்ள 200 வார்டுகளில் 15 வார்டுகளும், மதுரையில் 100 வார்டுகளில் 15 வார்டுகளும், திருச்சியில் 65 வார்டுகளில் 3 வார்டுகளும், நெல்லையில் 44 வார்டுகளில் 4 வார்டுகளும், கரூரில் 48 வார்டுகளில் 2 வார்டுகளும், கடலூரில் 45 வார்டுகளில் 6 வார்டுகளும் மட்டுமே அ.தி.மு.க.வால் வெற்றி பெற முடிந்துள்ளது. தி.மு.க. வாக்குகளை மட்டுமல்ல, அ.தி.மு.க. ஆதரவு வாக்குகளையும் சேர்த்து தி.மு.க. வாங்கி விட்டது. இதுதான் உண்மை.

எனவே, பொய்க் கணக்குகள் சொல்வதை விட்டுவிட்டு மக்களுக்கு ஆக்கபூர்வமான செயல்களைச் செய்வதில் பழனிசாமி கவனம் செலுத்த வேண்டும்.




தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (17.12.2024) தலைமைச் செயலகத்தில், சென்னை பத்திரிகையாளர் மன்றத் தேர்தலில் வெற்றி பெற்ற நிர்வாகிகள், தலைவர் எம்.சுரேஷ் வேதநாயகம், பொதுச் செயலாளர் ஆசிப், பொருளாளர் மணிகண்டன், இணைச் செயலாளர் நெல்சன் சேவியர், துணைத் தலைவர்கள் மதன், திருமதி சுந்தரபாரதி, நிர்வாகக் குழு உறுப்பினர்கள் ஸ்டாலின், கவாஸ்கர், திருமதி அகிலா ஈஸ்வரன், பழனிவேல், விஜயகோபால் மற்றும் ரிச்சர்ட் வில்சன் ஆகியோர் சந்தித்து வாழ்த்துப் பெற்றனர்.

# “சென்னை பத்திரிகையாளர் மன்றத்தின்” புதிய நிர்வாகிகளுக்கு வாழ்த்து!

## முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளப் பதிவு!

**சென்னை, டிச. 18 -**

**சென்னை பத்திரிகையாளர் மன்றத்தின் புதிய நிர்வாகிகளுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வாழ்த்துத் தெரிவித்துள்ளார்.**

இதுகுறித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், தமது சமூக வலைதளப் பதிவில் விடுத்துள்ள வாழ்த்துச் செய்தி வருமாறு:-

“சென்னை பத்திரிகையாளர் மன்றத்தின்” புதிய நிர்வாகிகள் வாழ்த்துப் பெற வந்தபோது, அரசு பல்வேறு பத்திரிகையாளர் நலத்திட்டங்களைச் சிறப்பாகச் செய்து வந்தாலும், இன்னும் சில கோரிக்கைகள் இருப்பதாகத் தெரிவித்தனர்.

அரசு அவற்றையும் படிப்படியாக நிறைவேற்றித் தரும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

‘Journalism’த்திற்கும் ‘Sensationalism’த்திற்கும் உள்ள வேறுபாட்டினையும், அவை சமூகத்தில் ஏற்படுத்தும் தாக்கங்களையும் இளைய தலைமுறை ஊடகவியலாளர்களுக்குப் பயிற்றுவித்து, அறமுடன் செயலாற்ற வேண்டியதன் அவசியத்தை சென்னை பத்திரிகையாளர் மன்றம் உணர்த்திட வேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளப் பதிவில் தெரிவித்துள்ளார்.

## அன்னியூர் சிவா எம்.எல்.ஏ.வின் கோரிக்கையை ஏற்று

# விக்கிரவாண்டியில் உழவர் சந்தை - ரூ.1.50 கோடி ஒதுக்கீடு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் உத்தரவு!

விக்கிரவாண்டி, டிச. 18 -

விக்கிரவாண்டி தொகுதி எம்.எல்.ஏ. அன்னியூர் சிவா சட்டசபையில் விவசாயிகள் பயன்பெற விக்கிரவாண்டியில் உழவர் சந்தை அமைக்க வேண்டும் என கோரிக்கை விடுத்து பேசினார்.

அவரது கோரிக்கை ஏற்கப்பட்டு, புதிய உழவர் சந்தைக்கு ஒரு கோடியே ஐம்பது லட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்.

விக்கிரவாண்டி நிலையத்தின் பஸ் பின்புறம் உள்ள இடத்தில் உழவர் சந்தை அமைய உள்ளது.

இதனால் தொகுதியில் உள்ள ரெட்டிகுப்பம், ராதாபுரம், பாப்பனப்பட்டு, வி.சாலை, வி.சாத்தனூர், பொன்னங்குப்பம், ஆசூர், தொரவி, சிறுவள்ளிக்குப்பம், வாக்கூர், பகண்டை, வெட்டுக்காடு உள்ளிட்ட பல்வேறு கிராமங்களைச் சேர்ந்த விவசாயிகள் பயனடைவார்கள்.

## வட கிழக்குப் பருவ மழை

# பயிர்ச் சேத கணக்கீட்டுப் பணியை விரைந்து முடித்திடுவீர்!

## வேளாண் துறை ஆய்வுக் கூட்டத்தில் - அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் வலியுறுத்தல்!

சென்னை, டிச.18–

வேளாண்மை உழவர் நலத் துறை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் தலைமையில் ஃபெஞ்சல் புயல் மற்றும் வட கிழக்கு பருவமழையினால் ஏற்பட்டுள்ள சேதங்கள் குறித்து ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.

இது பற்றிய விவரம் வருமாறு:–

நேற்று முன்தினம் (16.12.2024) தலைமைச் செயலகத்தில், அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் தலைமையில் தமிழ்நாட்டில் நடப்பு டிசம்பர் 2024 மாதத்தில் ஏற்பட்ட ஃபெஞ்சல் புயல் மற்றும் வடகிழக்குப் பருவ மழையினால் ஏற்பட்டுள்ள வெள்ள பாதிப்பு குறித்து அனைத்து மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர்கள், தோட்டக்கலைத் துறை துணை இயக்குநர்களுடன் காணொலி வாயிலாக ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது.

தமிழ்நாட்டில் டிசம்பர் முதல் வாரத்தில் ஏற்பட்ட ஃபெஞ்சல் புயல் காரணமாக 2,86,069 ஹெக்டேர் பரப்பில் வேளாண் பயிர்களும், 73,263 ஹெக்டேர் பரப்பில் தோட்டக்கலை பயிர்களும் சேதமடைந்துள்ளன.

இதனைத் தொடர்ந்து பெய்த வடகிழக்குப் பருவமழையின் காரணமாக 2,25,655 ஹெக்டேர் பரப்பில் வேளாண் பயிர்களும், 45,634 ஹெக்டர் பரப்பில் தோட்டக்கலைப்பயிர்கள் சேதமடைந்துள்ளன.



ஆக மொத்தம் இதுநாள் வரை 6,30,621 ஹெக்டேர் பரப்பளவில் பயிர் சேதம் ஏற்பட்டுள்ளது.

விழுப்புரம் மாவட்டத்தில் உள்ள விக்கிரவாண்டி மற்றும் அரகண்ட நல்லூர் ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் 2906 மெ.டன் வேளாண் விளைபொருட்கள் சேதமடைந்துள்ளது.

**பயிர் சேதம் கணக்கீட்டுப் பணி!**

பயிர் சேதப்பரப்பு கணக்கீட்டுப் பணியினை 17.12.2024க்குள் முடித்து, மாநில பேரிடர் நிவாரணத் தொகையினை விவசாயிகளுக்கு விரைவாக பெற்றுத் தரும் வகையில் உரிய கருத்துரு அரசிற்கு விரைவில் அனுப்பப்பட வேண்டும் என அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் அறிவுறுத்தினார்.

மேலும் கணக்கீட்டின் போது பாதிப்படைந்த எந்த விவசாயியும் விடுபடக்கூடாது என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும் என அறிவுறுத்தினார். மேலும், விவசாயிகளுக்கு ஏற்பட்டுள்ள இழப்பீட்டினை ஈடுகட்டும் விதமாக, பயிர் காப்பீட்டின் கீழ் விரைவாக இழப்பீடு வழங்குவது குறித்து விவாதிப்பதற்காக புள்ளியியல் துறை மற்றும் பயிர் காப்பீடு நிறுவனங்களுடன் 17.12.2024 கூட்டம் நடத்திட அறிவுறுத்தினார்.

இக்கூட்டத்தில் வேளாண் உற்பத்தி ஆணையர் மற்றும் அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் செல்வி அபூர்வா, வேளாண்மைத் துறை இயக்குநர் பி.முருகேஷ், தோட்டக்கலை மற்றும் மலைப் பயிர்கள் துறை இயக்குநர் பி.குமரவேல் பாண்டியன், தமிழ்நாடு வடிநீர்ப்பகுதி மேம்பாட்டு முகமையின் துணைத் தலைவர் / மேலாண்மை இயக்குநர் ஜெ.ஜெயகாந்தன், தலைமைப் பொறியாளர் (வே.பொ) ஆர்.முருகேசன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

இவ்வாறு தமிழ்நாடு அரசின் செய்திக் குறிப்பில் குறிப்பிடப் பட்டுள்ளது.



தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (17.12.2024) சென்னை அண்ணா சாலையில் புதியதாக பிரம்மாண்டமாக கட்டப்பட்டுள்ள கோ–ஆப்டெக்ஸ் கோலம் விற்பனை நிலையத்தை திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில் கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் ஆர்.காந்தி, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி. ஆர்.பிரியா, கோ–ஆப்டெக்ஸ் செயலாட்சியர் தீபக் ஜேக்கப், துணை மேயர் மு.மகேஷ் குமார், நிலைக்குழுத் தலைவர் (பணிகள்) நே.சிற்றரசு உள்பட அரசு அலுவலர்கள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.